Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
THURSDAY, FEBRUARY 15, 2024

வியாழக்கிழமை பெப்ரவரி 15, 2024 | ஒளி: 09 கதிர் 194 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ FREE

# A/L, O/L பரீட்சை திகதிகள் அறிவிப்பு

2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையை எதிர்வரும் மே மற்றும் ஜூன் மாதங்களில் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர் தர பரீட்சையை எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், 2025ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணை எதிர்வரும் ஜனவரி மாதம் 2ஆம் திகதி ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

இலங்கையில் அரச துறையின் திறனை கட்டியெழுப்ப

# இந்திய - இலங்கை கூட்டாண்மை

## பேச்சுவார்த்தைக்கு உயர்மட்ட குழு இந்தியா பயணம்



இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தும் வகையில், இலங்கையின் பொதுத்துறையின் திறனை அதிகரிக்க இந்திய-இலங்கை கூட்டாண்மை வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அண்மைய இந்தியா விஜயத்தின் போது, இரு நாட்டு மக்களின் நலனுக்காக இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை புதிய துறைகள் மூலம் வலுப்படுத்த இரு நாட்டுத் தலைவர்களும் ஒப்புக்கொண்டனர். குறிப்பாக இரு நாட்டு மக்களிடையேயும் தொடர்புகளை மேம்படுத்துவது குறித்து முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டது.

தொடர்ச்சி P2

# தோணி கவிழ்ந்ததில் இருவர் பலி



அப்துல்சலாம் யாசீம், ஏ.எச் ஹஸ்பர்


கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஈச்சந்தீவு பகுதியை சேர்ந்த இருவர் தோணி கவிழ்ந்து நீரில் மூழ்கியதில் உயிரிழந்துள்ளனர். இச்சம்பவம் புதன்கிழமை (14) சிறியால் ஓடை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கிண்ணியா-ஈச்சந்தீவு சின்னத்தோட்டம் பகுதியை சேர்ந்த ஆயிஸ் ரூபன் (வயது 17), புஷ்பகுமார் (வயது 42) எனவும் தெரியவருகிறது இருவரும் கடலுக்கு சென்ற நிலையில் தோணி கவிழ்ந்ததில் உயிரிழந்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரனை மூலம் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

# விமானப் படையினரும் களத்தில் குதித்தனர்

நிதர்ஷன் வினோத்



நாடளாவிய ரீதியில் இரண்டாவது நாளாகவும் புதன்கிழமை (14), மேற்கொள்ளப்பட்ட சுகாதார பணியாளர்களின் பணி பகிஷ்கரிப்பு போராட்டம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலும் இடம்பெற்றது.

தொடர்ச்சி P2

# காதலர் தினத்தை கொண்டாடிய 'பிளமிங்கோ'



'பிளமிங்கோ' என சொல்லப்படும் வெளிநாட்டுப் பறவைகள் மன்னார் மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளன. இந்த பறவைகளின் வருகை சுற்றுலாப் பயணிகளுக்குச் சிறந்த அனுபவத்தை வழங்கி வருகிறது.
– எஸ்.றொசேரியன் லெம்பேட்

# முகத்துவாரத்தில் துப்பாக்கிச் சூடு



கொழும்பு-முகத்துவாரம் (மோதரை) பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மோதர வீதியிலுள்ள உணவகத்துக்கு முன்பாக, செவ்வாய்க்கிழமை (13) இரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், அந்த உணவகத்தின் முகாமையாளராக பணியாற்றும் நபர் படுகாயமடைந்தார்.

தொடர்ச்சி P2

தோட்ட மக்களை தொழில்முனைவோராக வலுவூட்ட

# சமூக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது

எமது நாட்டிற்கு பெரும் வளமாகக் காணப்படும் மலையக மற்றும் தென் பகுதி தோட்ட சமூகத்தினரின் வாழ்க்கை, வாழ்வாதாரம், ஜீவனோபாயம் உள்ளிட்ட சமூக, பொருளாதார, அரசியல் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக, மலையகம் மற்றும் தென் பகுதியை பெருந்தோட்டத் துறையில் உள்ள சமூகத்துடன் இன்று ஒரு முக்கியமான சமூக உடன்படிக்கையை மேற்கொள்ள முடிந்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் இதற்கென தனியான ஜனாதிபதி செயலகம் ஸ்தாபிக்கப்பட்டு, மலையக மற்றும் தென் பகுதி தோட்ட சமூகத்தினர் எதிர்நோக்கும் பொருளாதார,சமூக ரீதியான அபிவிருத்தி மற்றும் அரசியல் பிரச்சினைகள் உள்ளிட்ட உட்கட்டமைப்புத் துறையில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கும் இணக்கப்பாட்டுடன் உடன்படிக்கை எட்டப்பட்டதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



பம்பலப்பிட்டிய வீட்டின் பூட்டை உடைத்த

# தேரர்கள் இருவருக்கும் விளக்கமறியல்

பல கோடி ரூபாய் பெறுமதியான, பம்பலப்பிட்டி ஃபரிட் பிளேஸில் உள்ள பழைய இரண்டுமாடிகளைக் கொண்ட வீட்டுக்கு போடப்பட்டிருந்த பூட்டை உடைத்துக்கொண்டு, சட்டவிரோதமான முறையில், உள்நுழைந்தனர் என்றக் குற்றச்சாட்டின் கீழ், கைது செய்யப்பட்ட பௌத்த தேரர்கள் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பம்பலப்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இவ்விருவரும், கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

தொடர்ச்சி P2



# துறைசார் நிபுணர்களை உருவாக்கக்கூடிய

## "கல்வி முறை உருவாக்கப்படும்"

நாட்டை பொருளாதார மாற்றத்திற்கு இட்டுச் செல்வதற்கு, உலகத்திற்கு உகந்த வகையிலான புதிய கல்வி முறைமை அவசியமானது எனவும், அதன் மூலம் போட்டி நிறைந்த உலகச் சந்தைக்குத் தேவையான துறைசார் நிபுணர்களை உருவாக்க முடியும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

3 மாணவிகள் துஷ்பிரயோகம்:

# ஆசிரியர்கள் இருவர், ஓடோ சாரதிக்கு 42 வருடங்கள் சிறை

ஆர். ரமேஷ்

வெவ்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த மூன்று மாணவிகளை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினர் என்ற குற்றச்சாட்டின் பேரில், கைது செய்யப்பட்ட இரண்டு ஆசிரியர்கள், ஓட்டோ சாரதி ஆகிய மூவரையும், குற்றவாளிகளாக இனங்கண்ட நுவரெலியா மேல் நீதிமன்றம் அந்த மூவருக்கும் மொத்தமாக 37 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

இதில், இரண்டு சம்பவங்களுக்கான தீர்ப்பு, நுவரெலியா மேல் நீதிமன்ற நீதிபதி விராஜ் வீரசூரியவால் புதன்கிழமை (14) வழங்கப்பட்டது மற்றுமொரு சம்பவத்துக்கான தீர்ப்பு, ஜனவரி 31ஆம் திகதி, , நுவரெலியா மேல் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# 1,600 போதை குளிசைகளுடன் வைத்தியர் கைது

நவி

ஆயிரத்து 600 போதை மாத்திரைகளுடன் வைத்தியர் ஒருவர் கம்பளை, ஏத்கால பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேராதனை வைத்தியசாலையில் சேவையாற்றும் 49 வயதான வைத்தியர் ஒருவரே, செவ்வாய்க்கிழமை (12) இரவு 11 மணியளவில் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பேராதனை பகுதியில் இருந்து, கம்பளை ,ஜயமாலபுர பகுதிக்கு போதை மாத்திரைகளை எடுத்துவந்த வேளையிலேயே, ஏத்கால பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தம்மிக்க கெக்குலந்தர தலைமையிலான பொலிஸ் குழுவினரால் குறித்த வைத்தியர் கைது செய்யப்பட்டுள்ளார்.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# இந்திய - இலங்கை கூட்டாண்மை

தற்போது, இந்தியா சிவில் சேவைகளின் திறனை கட்டியெழுப்ப ஒரு பாரிய வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அரச துறையின் திறனைக் கட்டியெழுப்பும் இந்திய-இலங்கை கூட்டாண்மையானது இலங்கையில் அரச நிறுவனங்களின் கட்டமைப்பை மிகவும் புதுமையான முறையிலும் செயற்திறனுடனும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த வாய்ப்பளிக்கும்.

இந்த திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பான உயர்மட்ட பேச்சுவார்த்தைக்கான இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் போரில் இந்தியாவின் நல்லாட்சிக்கான தேசிய மையத்தின் பணிப்பாளர் நாயகம் பாரத் லால், அண்மையில் இலங்கைக்கு வருகை தந்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோருடன் கலந்துரையாடினார்.

இதன்போது இலங்கையின் அரச சேவையில் பயனுள்ள மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகக் கண்காணிப்பு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் அரச நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்தும் முறை குறித்து நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடல்களின் பலனாக, இலங்கையில் இருந்து உயர்மட்டக் குழுவொன்று இந்தியாவுக்குச் சென்று, பொருத்தமான திறன் மேம்பாட்டு ஒத்துழைப்புத் திட்டத்தைத் தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட இந்திய நிறுவனங்களுடன் மேலதிக கலந்துரையாடல்களை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க தலைமையில், பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் தலைவர், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவன பணிப்பாளர் நாயகம், சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல், இலங்கை முதலீட்டுச் சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் உள்ளிட்ட 14 அரச அதிகாரிகளைக் கொண்ட உயர்மட்டக் குழு பெப்ரவரி 12 முதல் 17 வரை இந்தியா நல்லாட்சி தேசிய மையத்தில் நடைபெறும் நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர். இந்திய அரசினால் இதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் அளிக்கப்படுகிறது.

அதன்படி, இலங்கையில் 12 அரச நிறுவனங்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் டிஜிட்டல் கொள்முதல் உள்ளிட்ட அரசின் பிரதான சேவைகளுக்காக டிஜிட்டல்மயமாக்கலை செயற்படுத்தல், புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அரச ஊழியர்களின் திறன் மேம்பாடு, ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள், முதலீட்டு வசதிகள் அளித்தல் மற்றும் உணவுகளின் நடுநிலையான விலைப் பொறிமுறை ஆகிய பிரிவுகளுடன் தொடர்புள்ள நிறுவனங்களின் திறனை அபிவிருத்தி செய்வதற்கான வழிமுறைகள் குறித்து கவனம் செலுத்தப்படுகிறது.

அரச சேவையின் மேம்பாட்டிற்கான அண்மைய முன் முயற்சிகள் மற்றும் பொருளாதார நலன் குறித்த இந்திய அரசு நிறுவனங்களால் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்ட கொள்கை, நிறுவன மற்றும் செயல்பாட்டு மேம்பாடுகளின் மூலம் இந்தியா அடைந்துள்ள முன்னேற்றம் தொடர்பில் அறிந்து கொள்ள இலங்கை பிரதிநிதிகள் குழு நடவடிக்கை எடுக்கும்.

மேலும், நிலையான பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதோடு இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கும் அரச நிறுவனங்களின் திறனை அதிகரிக்கவும், சம்பந்தப்பட்ட இந்திய நிறுவனங்களுடன் நிறுவக்கூடிய நிறுவன ஒத்துழைப்புகளை அடையாளம் காணவும் பிரதிநிதிகள் குழு எதிர்பார்க்கிறது.

இலங்கைப் பிரதிநிதிகள் குழு கலந்துரையாடல்களிலும் பங்கேற்க இருப்பதோடு, இந்திய வெளிவிவகார அமைச்சர், ஆளணி தொடர்பான இராஜாங்க அமைச்சர், மக்கள் குறைகேள் அமைச்சர், வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் மற்றும் பிரதமரின் செயலாளர், அமைச்சரவைச் செயலாளர் ஆகியோருடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவுள்ளனர்.

# A/L, O/L பரீட்சை திகதிகள் அறிவிப்பு

இதேவேளை, 2023(2024) கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான நடைமுறைப் பரீட்சைகள் எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாகப் பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

அழகியல் பாடங்கள் மற்றும் வீட்டுப் பொருளாதாரம் ஆகிய பாடங்கள் தொடர்பான நடைமுறைத் தேர்வு நடத்தப்பட உள்ளது.

இந்த பாடத்துக்கான பாடசாலை பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள், பாடசாலை அதிபர்களுக்கும், தனியார் விண்ணப்பதாரர்களின் அனுமதி அட்டைகள், அவர்களது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குத் தபால் மூலமும் அனுப்பி வைக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களுக்கு, பரீட்சை திணைக்கள இணையத்தளத்தில் (w donets.lk) அனுமதி அட்டைகளைப் பதிவிறக்கம் செய்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# தோணி கவிழ்ந்ததில் இருவர் பலி

உயிரிழந்தவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதுடன்> பிரேதப் பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கிண்ணியா பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முகத்துவாரத்தில் துப்பாக்கிச் சூடு

துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்த கொழும்பு-14 மஹவத்தை ஒழுங்கையை வசிப்பிடமாகக் கொண்ட 51 வயதான நபர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உணவகத்தின் முகாமையாளர், உணவகத்துக்கு முன்பாக உள்ள படலைக்கு அருகில் நின்றுகொண்டிருந்த போது, காரில் வந்த இனந்தெரியாத நபர், துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச்சென்றுள்ளார்.

இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்வதற்காகக் கைத்துப்பாக்கியைப் பயன்படுத்தியுள்ளார் என்பது ஆரம்பக்கட்ட விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமைக்கான காரணம் வெளியாகவில்லை எனத் தெரிவித்த மோதரை பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# சமூக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைமை அலுவலகத்தில், மலையக, தென்பகுதி பெருந்தோட்ட சமூகங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான உறுதிமொழியை வழங்கி, பல்வேறு தோட்ட அரசியல் கட்சிகள் மற்றும் பிரதிநிதிகளுடன், சமூக உடன்படிக்கை, புதன்கிழமை (14) கைச்சாத்திடப்பட்டது.

இலட்சக்கணக்கான மலையக மற்றும் தென் பகுதி பெருந்தோட்ட சமூகங்கள் நாட்டின் உயிர்நாடிக்குப் பங்களித்து வருவதால், அவர்களை எப்போதும் கூலித்தொழிலாளிகளாகவே வைத்திருக்காது, அவர்களுக்கு பயிர்ச்செய்கை நில உரிமை மற்றும் வீட்டுரிமைகளை வழங்குவதோடு, பெருந்தோட்டத் துறையில் பெருந்தோட்ட தொழில் முயற்சியாளர்களாக பணியாற்றும் பெரும் வாய்ப்பும் இதன் மூலம் உருவாவதாகவும், இது வரை இரண்டாம், மூன்றாம் வகுப்பினர் எனும் கவனிப்பாரற்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த இந்த சமூகத்திற்கு, வார்த்தைகளோடு மட்டுப்பட்ட கோஷங்களைக் கடந்து, ஒரு குறித்த காலக்கெடுவுக்கு உட்பட்ட வகையில், இந்த மக்களை வலுவூட்ட, தெளிவான சமூக இணக்கப்பாட்டை எட்டியதாக எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கம் நிறுவப்பட்ட முதல் நாளிலிருந்தே, இந்த பிரச்சினைகள் அனைத்தையும் கலந்துரையாடுவதற்குப் பதிலாக, இந்த சமூக ஒப்பந்தத்தை நடைமுறை ரீதியாக யதார்த்தமாக்குவதற்குத் தாம் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்த அவர், இந்நாட்டின் ஜனநாயக வரலாற்றில் இது ஒரு முக்கியமான தருணம் என்று கூறலாம் எனவும், அரசியல் சூழ்ச்சிகளால் நாளுக்கு நாள் வஞ்சிக்கப்படும் மலையக மற்றும் தென்பகுதி பெருந்தோட்ட சமூகத்திற்கு, பொருளாதார மற்றும் சமூக சுதந்திரத்தை ஏற்படுத்தும் ஒரு முக்கியமான பயணத்தை மேற்கொள்வதே, ஐக்கிய மக்கள் கூட்டணியின் முதன்மையான பணி என்றும் அவர் தெரிவித்தார்.

மலையக, தென் பகுதி பெருந்தோட்ட சமூகத்தின் உண்மையான பிரதிநிதிகளுடன் இன்றைய தினம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதாகவும், தமது சொந்த பதவி சலுகைகளை விடுத்து, தமது சமூகத்தைப் பாதுகாத்து அபிவிருத்தியின் விடியலைக் கொண்டு வருமாறு கோரிக்கை விடுத்துள்ளதாகவும், இவ்வாறானவர்களுடன் இப்படியான சமூக ஒப்பந்தத்தை எட்டியதில் மகிழ்ச்சியடைவதாகவும் எதிர்கட்சித் தலைவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இந்த உடன்படிக்கையில் ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தமிழ் முற்போக்கு கூட்டணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், தேசிய தொழிலாளர் முன்னணியின் தலைவர் பழனி திகாம்பரம், மலையக மக்கள் முன்னணி தலைவர் வி.இராதாகிருஷ்ணன், கேகாலை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா, கண்டி மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். வேலுகுமார், நுவரெலியா மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.உதயகுமார் ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

# விமானப் படையினரும் களத்தில் குதித்தனர்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இலங்கை விமானப்படையினர், நோயாளர் உதவிப் பணிகளுக்காகக் கடமையில் ஈடுபட்டனர்.

72 சுகாதார தொழிற்சங்கங்களைச் சேர்ந்த ஊழியர்கள் செவ்வாய்க்கிழமை (13) காலை 6.30 முதல் தொடர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிரியர்கள் இருவர், ஓடோ சாரதிக்கு 42 வருடங்கள் சிறை

பாடசாலை மாணவி ஒருவரை மூன்று முறை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டப்பட்டிருந்த கொட்டக்கலை பகுதியைச் சேர்ந்த (43) வயதுடைய பாடசாலை ஆசிரியரை 2 குற்றச்சாட்டுகளில் குற்றவாளியாக இனங்கண்ட நீதிமன்றம் அவருக்கு 17 வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துள்ளது. முதலாவது குற்றச்சாட்டில் இருந்து அவர் விடுதலை செய்யப்பட்டார்.

இவருக்கு எதிராக நுவரெலியா மேல் நீதிமன்றில் கடந்த 2019 ஆம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. கடந்த ஐந்து வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், குற்றவாளியாக இனங்கண்ட நீதிமன்றம் அவருக்கு மேற்படி தீர்ப்பை வழங்கியுள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவிக்கு ஐந்து இலட்சம் ரூபாய் நட்டஈடு வழங்க வேண்டும். தண்டப் பணமாக 25 ஆயிரம் ரூபாய் செலுத்த வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. இதைச் செலுத்தாவிட்டால் 3 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாத சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

இது இவ்வாறிருக்க வலப்பனை பகுதியைச் சேர்ந்த ஓட்டோ சாரதியான 35 வயதான நபர், தனது உறவுக்கார பிள்ளையான பாடசாலை மாணவியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் குற்றவாளியாக இனங்காணப்பட்டார்.

இவருக்கு எதிராக நுவரெலிய மேல் நீதிமன்றத்தில் 2013 ஆண்டு தொடரப்பட்ட வழக்கில் இவர் குற்றவாளியாக இனங்காணப்பட்டார். அவருக்கு 10 வருடக் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கிய நீதிபதி பாதிக்கப்பட்ட மாணவிக்கு 07 இலட்சம் ரூபாய் நட்ட ஈட்டு வழங்க வேண்டும். 25 ஆயிரம் ரூபாய் தண்டம் செலுத்த வேண்டும். இவற்றைச் செலுத்தாத பட்சத்தில் மேலும் 06 மாத கால சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பளித்தார்.

இந்நிலையில், பாடசாலை மாணவி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில், தலவாக்கலை பிரதேசத்தை சேர்ந்த பாடசாலை ஆசிரியருக்கு கடந்த ஜனவரி மாதம் 31ஆம் திகதி 15 வருட கடூழிய சிறை தண்டனையை நுவரெலியா மேல் நீதி மன்ற நீதிபதி வழக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தேரர்கள் இருவருக்கும் விளக்கமறியல்

இதன்போது, மேலதிக நீதவான் பண்டார இளங்கசிங்க, அவ்விருவரையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த தேரரர்களில் ஒருவர், வயது குறைந்தவர் என்பதனால், அவரை நன்னடத்தை நிலையத்தில் தடுத்துவைக்குமாறும் மேலதிக நீதவான் உத்தரவிட்டார்.

மாலபே பிரதேசத்தில் உள்ள விஹாரையைச் சேர்ந்த தேரர்கள் இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தன்னுடைய வீட்டின் பூட்டை உடைத்துக்கொண்டு, தேரர்கள் இருவர் மற்றும் மற்றொரு நபர், வீட்டுக்குள் பலவந்தமாகத் தங்கியிருப்பதாக, அந்த வீட்டின் உரிமையாளர் எனக் கூறப்படும் பெண், பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய, ஸ்தலத்துக்கு விஜயம் செய்த பொலிஸ் குழு, அப்போது வீட்டிலிருந்த 20 மற்றும் 14 வயதுகளுடைய பௌத்த தேரர்கள் இருவரைக் கைது செய்தனர்.

இந்த வீடு, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதர, சகோதரியான மூவருக்கு உரித்துடையது. உரிமையாளர் வெளிநாட்டுக்கு சென்றிருக்கும் நிலையில், அற்றோனி தத்துவத்தின் பிரகாரம், வீட்டின் ஒருபகுதியை கொடுத்துள்ளதாகவும் அதனால், வீட்டின் உரிமையாளரின் வீட்டுக்குள் நுழைத்துள்ளதாக விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# துறைசார் நிபுணர்களை உருவாக்கக்கூடிய...

பரீட்சை சுமையைக் குறைத்து, ஆங்கிலம் மற்றும் தொழில்நுட்ப பாடங்களைக் கல்வி முறையில் உள்ளடக்கி, தொழிலுக்கு ஏற்ற வகையிலான மாணவர்களை உருவாக்க எதிர்பார்ப்பதாகவும், புதிய தொழிற்கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கொள்ளுப்பிட்டி புனித அந்தோனியார் பெண்கள் கல்லூரியில் புதன்கிழமை (14) பாடசாலை மாணவ, மாணவிகளுக்கான இலவச பாடசாலை பாடப் புத்தகங்கள் மற்றும் பாடசாலை சீருடைகள் வழங்கும் தேசிய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் இவ்வாறு தெரிவித்தார்.

எனது வீட்டிற்கு அருகில் ஐந்து பாடசாலைகள் உள்ளன. நான் கற்ற றோயல் கல்லூரி மற்றும் தேர்ஸ்டன் கல்லூரி, மகளிர் கல்லூரி, மகாநாம கல்லூரி மற்றும் புனித அந்தோனியார் பெண்கள் கல்லூரி என்பனவே அவை. அதனால் எனக்கு கல்வித்துறையில் அதிக கவனம் செலுத்த முடிந்துள்ளது. ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தனவின் ஆட்சிக் காலத்தில் இப்பாடசாலைகளின் அபிவிருத்தியில் கவனம் செலுத்தினோம்.

2022இல் நாட்டில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடியால், கல்வித் துறை மட்டுமல்ல, அனைத்துத் துறைகளும் சரிவைச் சந்தித்தன. பாடசாலை பாடப்புத்தகங்கள், சீருடைகள் வழங்க முடியவில்லை. அந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்க எந்த தலைவரும் முன்வரவில்லை. அப்போது, சவாலை ஏற்று, நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் திட்டத்தை ஆரம்பித்தேன்.

இந்த பொருளாதார வேலைத்திட்டத்தினால் இன்று நாடு ஓரளவு பொருளாதார ஸ்திரத்தன்மை பெற்று வருகின்றது. அதன்படி, பாடசாலை சீருடைகள் மற்றும் பாடப்புத்தகங்களை உரிய நேரத்தில் வழங்க அரசாங்கத்தினால் முடிந்துள்ளது. அதற்காக 14 பில்லியன் ரூபாவுக்கும் அதிக தொகை செலவிடப்பட்டது. கல்வி மறுசீரமைப்பின் ஊடாக நாட்டில் புதிய கல்வி முறையொன்றை உருவாக்க வேண்டும். உலகிற்கு பொருத்தமான தொழில் படையினை உருவாக்குவது குறித்து கவனம் செலுத்த வேண்டும். நாட்டில் பொருளாதார புரட்சியை ஏற்படுத்துவதற்கு கல்வி முறையை உலகிற்கு பொருத்தமான வகையில் மாற்றியமைக்க வேண்டும்.

அதன் மூலம் உலகிற்கு தேவையான தொழில் படையினை உருவாக்க முடியும்.

அதனூடாக சர்வதேச சந்தையுடன் போட்டியிடும் வாய்ப்பு எமக்கு கிடைக்கும் என்றார்.

# சூழ்ச்சிகளை முறியடித்து மாநாட்டை நடத்துக

உட்கட்சி ஜனநாயகத்தைச் சிதைக்கும் வகையில் நடைபெறும் சூழ்ச்சிகளை முறியடித்து, உடனடியாக மாநாட்டை நடத்துமாறு, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், கட்சியின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள சிவஞானம் ஸ்ரீதரனுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் ஸ்ரீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகிய இருவரும் இணைந்து, கொழும்பிலுள்ள இல்லத்தில் இரா.சம்பந்தனை, செவ்வாய்க்கிழமை (13) சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# 1,600 போதை குளிசைகளுடன் வைத்தியர் கைது

அவரிடமிருந்த போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன, வைத்தியருக்குரிய அடையாள சின்னத்துடன் அவர் பயணித்த வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார் என தெரிவித்த கம்பளை ஏத்கால பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

# திருநீற்றுப் புதன்

மன்னார்- மறை மாவட்டத்தில் உள்ள அனைத்து தேவாலயங்களிலும் திருநீற்றுப் புதன் திருப்பலி இன்று புதன்கிழமை (14) காலை பங்குத்தந்தையர்களினால் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இந்த நிலையில், மன்னார் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத்தில் காலை 6.30 மணிக்கு பங்குத்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார் தலைமையில் அருட்தந்தையர்கள் இணைந்து திருப்பலியை ஒப்புக் கொடுத்தனர்.

இதன்போது பங்கு மக்கள், பாடசாலை மாணவர்கள், அருட்ச கோதரிகள் என பலரும் திருப்பலியில் கலந்து கொண்டனர்.

கிறிஸ்தவர்களின் புனித நாள்களில் ஒன்றான திருநீற்றுப் புதன், (புதன்கிழமை 14) ஆரம்பமானது. அன்றிலிருந்து கிறிஸ்தவர்களின் புனித புண்ணிய தவக்காலம் ஆரம்பமாகிறது.

இத்தவக்காலம் எதிர்வரும் மார்ச் மாதம் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை அனுஷ்டிக்கப்படும். மார்ச் மாதம் 29 ஆம் திகதி புனித பெரிய வெள்ளி அனுஷ்டிக்கப்பட உள்ளது.

அன்று இயேசு கிறிஸ்து பாடுபட்டு மரித்து அடக்கம் செய்யப்பட்ட நாளாகும். இதனை ஒட்டியதாக நாற்பது நாட்கள் புனித தவக் காலமாகும்.

இயேசு பிரான் அனுபவித்த பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகிய மூன்றும் இந்த தவக்காலத்தில் நினைவு கூரப்படும்.

- ரொசேரியன் லெம்பட்











## அட்டலுகம சிறுமி படுகொலை:
# 'பள்ளிக்குட்டி'க்கு 27 வருட கடூழியச் சிறை



பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தும் நோக்கில், தன்னுடைய நண்பனின் 9 வயதான சிறுமியை கடத்திச் சென்று சேற்றில் அமிழ்த்தி படுகொலைச் செய்தார் என்ற குற்றத்தை ஒப்புக்கொண்ட நபரை குற்றவாளியாக இனங்கண்ட பாணந்துறை மேல் நீதிமன்றம், அவருக்கு 27 வருட கடூழியச் சிறைத்தண்டனையை விதித்ததுடன், அந்த சிறுமியின் தாய்க்கு 30 இலட்சம் ரூபாய் நட்டஈடு வழங்குமாறும் உத்தரவிட்டுள்ளது.

பாணந்துறை, அட்டுலுகம பிரதேசத்தில் 2022ஆம் ஆண்டு, மே மாதம் 9 வயது சிறுமியைக் கடத்திச் சென்று சேற்றில் அமிழ்த்திய நபருக்கே பாணந்துறை மேல் நீதிமன்ற நீதிபதி சமன் குமார மேற்கண்டவாறு தீர்ப்பை வழங்கியுள்ளார்.

அடிக்கொரு தடவை வீட்டுக்குச் செல்லும் இச்சிறுமியின் தந்தையின் நண்பரான பிரதிவாதியின் செயலால் சிறிய மலர் கருகியுள்ளது.

இவ்வாறான குற்றங்களைச் செய்யும் சமூகத்தில் இருக்கும் ஏனைய குற்றவாளிகளுக்கு ஒரு பாடமாக இருக்கும் வகையில் இந்த பிரதிவாதிக்குத் தண்டனை வழங்கப்படவேண்டுமென மனுதாரர் சார்பில் ஆஜராகியிருந்த அரச சட்டத்தரணி ஒசுவல்ட் லக்ஷ்மன், மன்றில் கோரியிருந்தார்.

அட்டலுகமவை வசிப்பிடமாகக் கொண்ட 'பள்ளிக்குட்டி' என்றழைக்கப்படும் மொஹமட் பாரூக் மொஹமட் கணேசநாதன் என்பவருக்கு இவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

பிரதிவாதிக்கு எதிராக அடிப்படை சாட்சிகளை விசாரணைக்கு உட்படுத்தாது, சட்டமா அதிபரினால், மேல் நீதிமன்றத்தில் நேரடியாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2022 மே 27ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த நாளொன்றில், பாலியன் வன்புணர்வுக்கு உட்படுத்தும் வகையில், சிறுமியை கடத்தியமை, பெற்றோர்களிடமிருந்து அந்த சிறுமியை பிரித்தமை, மரணத்தை ஏற்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகள், பிரதிவாதிக்கு எதிராக சட்டமா அதிபரினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்ட குற்றச்சாட்டுகளை, திறந்த நீதிமன்றத்தில் வைத்து பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்த சிறுமி வீட்டுக்கு அருகிலுள்ள கடையொன்றுக்கு சென்று திரும்பிக்கொண்டிருந்தபோது, வழியில் காத்திருந்த பிரதிவாதி, அச்சிறுமியை தூக்கிக்கொண்டு காட்டுக்குச் சென்றுள்ளார். அங்கு, அச்சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்த முயற்சித்தபோது, அச்சிறுமி அலரியுள்ளார்.

இதனையடுத்து அருகிலுள்ள சேற்றுக்குள் அமிழ்த்தி, அச்சிறுமியை படுகொலைச் செய்துள்ளார்.

இந்த வழக்கின் தீர்ப்பின் பிரகாரம், சிறுமியின் தாய்க்கு 30 இலட்சம் ரூபாயை நட்டஈடாக செலுத்த தவறின், மேலே குறிப்பிட்ட 27 வருட கடூழிய சிறைக்கு மேலதிகமாக 6 வருடங்கள் சாதாரண சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.





# ஆசிரியர் இடமாற்றம்; மகஜர் கையளிப்பு

பாறுக் ஷிஹான்

கிழக்கு மாகாணக் கல்வி திணைக்களம் அண்மையில் வெளியிட்ட ஆசிரியர் இடமாற்ற பட்டியலை இரத்து செய்ய கோரி கல்முனை மற்றும் சம்மாந்துறை கல்வி வலய ஆசிரியர்கள் குழுவினர் அம்பாறை மாவட்ட செயலகம் முன்னால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை புதன்கிழமை (14) மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது அம்பாறை கச்சேரியில், அம்பாறை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திற்கு கலந்து கொள்வதற்கு வருகை தந்த திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி எச்.எம். எம் ஹரீஸ், சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் ஆகியோரை போராட்டக்காரர்கள் சந்தித்து தங்களுடைய பிரச்சினைகளை கூறி மகஜர் ஒன்றினை வழங்கி வைத்துள்ளனர்.

குறித்த மகஜரை பெற்றுக்கொண்ட இரு பாராளுமன்ற உறுப்பினர்களும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உரிய விடயத்தை எடுத்து சென்று நியாயமான தீர்வு ஒன்றினை பெற்றுத்தருவதாக உறுதி அளித்துள்ளனர்.

## வேட்டைக்கு சென்ற நபர்
# துப்பாக்கி வெடித்து மரணம்

செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு - குமுழமுனை, தண்ணிமுறிப்பு காட்டுப்பகுதியில் வேட்டைக்கு சென்ற குடும்பஸ்தர் ஒருவர் சட்டவிரோத துப்பாக்கி வெடித்து வியாழக்கிழமை (14) அதிகாலை உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் ஆறுமுகத்தான் குளத்தினை சேர்ந்த 48 வயதுடைய துரைராசா ஆனந்தராசா என்பவரே இவ்வாறு மரணமடைந்ள்ளார் .

சம்பவத்ன்று குறித்த நபர் துப்பாக்கி வெடித்து படுகாயமடைந்த நிலையில், அவருடன் வேட்டைக்கு சென்றவர்களால் அவரை கொண்டுவரும்போது உயிரிழந்துள்ளார்.

மேலும் இவர் பயன்படுத்திய சட்டவிரோத துப்பாக்கி மற்றும் உயிரிழந்தவரின் சடலம் தண்ணிமுறிப்பு, குளக்கரை பகுதியில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவ தொடர்பிலான விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# வாகன விபத்தில் இருவர் காயம்

சுமணசிறி குணதிலக்க

மொனராகலையில் செவ்வாய்க்கிழமை (13) தனியார் பேருந்து ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

மொனராகலையில் இருந்து பதுலுவெல நோக்கிப் பயணித்த குறித்த பேருந்து தம்பகெல்ல பதுலுவெல வீதி, கொப்பேவ சந்திக்கு அருகில் வைத்து எதிரில் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியே இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக தம்பகல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதியான 19 வயதுடைய இளைஞனும் பின்னால் பயணித்த 40 வயதுடைய நபரும் பலத்த காயமடைந்து மொனராகலை பொது வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை தம்பகல்லை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பீடி இலைகளுடன் பூச்சி கொல்லி மருந்துகள் மீட்பு



ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - சின்னப்பாடு கடற் பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒருதொகை பீடி இலைகள் மற்றும் போத்தலில் அடைக்கப்பட்ட பூச்சி கொல்லி மருந்துகள் என்பன மீட்டுள்ளதுடன், சம்பவத்துடன் தொடர்புடைய நால்வர் புதன்கிழமை (13) கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமேற்கு கடற்படை கட்டளையின் கடலோர பாதுகாப்பு கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட விஷேட தேடுதல் நடவடிக்கையின்போது சின்னப்பாடு கடற் பிரதேசத்தில் சந்தேகத்திடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு டிங்கி இயந்திர படகுகளை சோதனையிட்டதில் 41 உர மூடைகளில் அடைக்கப்பட்ட 1,177 கிலோ கிராம் பீடி இலைகள் மற்றும் 150 போத்தல் பூச்சி கொல்லி மருந்துகள் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கைது செய்யப்பட்ட நால்வரும் 21 வயது தொடர் 45 வயதுடைய கற்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக கடற்படையினர் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த நால்வரும், கைப்பற்றப்பட்ட பீடி இலைகள், பூச்சி கொல்லி மருந்துகள் என்பனையும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்க அலுவலகத்திடம் ஒப்படைத்துள்ளதாகவும் கடத்தலுக்கு பயன்படுத்திய இரண்டு டிங்கி இயந்திர படகுகளை மேலதிக நடவடிக்கைகளுக்காக தமது பொறுப்பில் வைக்கப்பட்டிருப்பதாகவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

# ஆறு மாணவர்களுக்கு விளக்கமறியல்

சப்ரகமுவ பல்கலைக்கழக, விவசாய பீடத்தின் இரண்டாம் வருட மாணவி ஒருவரையும், இரு மாணவர்களையும் தாக்கிய சம்பவம் தொடர்பில் புதன்கிழமை (14) கைது செய்யப்பட்ட ஏனைய சிரேஷ்ட மாணவர்கள் 6 பேரையும் வியாழக்கிழமை (15) வரை விளக்கமறியலில் வைக்குமாறு பலாங்கொட நீதவான் ஹெஷானி ரொட்ராகோ உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 9ஆம் திகதி இரவு உணவகத்தில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இதில் ஒரு மாணவி மற்றும் இரண்டு மாணவர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்க ப்பட்டுள்ளதாகவும்



சமனலவெவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதே சம்பவம் தொடர்பில் ஏற்கெனவே கைது செய்யப்பட்ட 7 சிரேஷ்ட மாணவர்களையும் புதன்கிழமை (14) பலாங்கொடை நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டுள்ளதுடன், அவர்களையும் வியாழக்கிழமை (15) வரை விளக்கமறியலில் வைக்குமாறு பலாங்கொட நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## காட்டுயானை தாக்குதலில்
# குடும்பஸ்தர் படுகாயம்

செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு-வெலிஓயா பிரதேசத்தில் வயல் காவலுக்கு சென்ற குடும்பஸ்தர் ஒருவர் புதன்கிழமை (13) யானை தாக்குதலுக்குள்ளாகி படுகாயமடைந்துள்ளார்.

வெலிஓயா- ஜனகபுரம் பகுதியை சேர்ந்த 50 வயதுடைய விவசாயி ஒருவரே இவ்வாறு யானை தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

குறித்த நபர், கால் ஒன்று முறிந்த நிலையில் மீட்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காட்டுயானைகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாற்றமுடியாத வகையில் பரீட்சை திகதிகளை குறிப்பது அவசியம்

கொரோனா தொற்று, பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களின் கடுமையான தாக்கத்தால், பல துறைகளின் சுழற்சி, தலைகீழாகப் புரண்டுவிட்டது. தொழிற்றுறைகள் கடும் தாக்கத்துக்கு முகங்கொடுத்தன. வேலை இழப்புகள் அதிகரித்தன, புதியவர்களை இணைத்துக்கொள்ளல் நிறுத்தி வைக்கப்பட்டன. வெளிநாடுகளுக்கு படையெடுப்போரின் எண்ணிக்கையும், அதிகரித்துள்ளது.

தனியார்த்துறைகளில், ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய 60 வயதுக்கும் மேற்பட்டவர்கள் கட்டாயமாக அனுப்பி வைக்கப்பட்டனர். நிரந்த ஊழியர்களாகச் சேர்த்துக்கொள்வோரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. பல வருடங்களாக எந்தவிதமான கொடுப்பனவுகளும் அதிகரிக்கப்படவில்லை. இவற்றுக்கெல்லாம் பிரதான காரணமாகப் பொருளாதார நெருக்கடியையே குறிப்பிடலாம்.

எனினும், கல்வித்துறையில் குறிப்பாகப் பிரதான பரீட்சைகள் பிற்போடப்பட்டமைக்கு கொரோனாவே பிரதான பங்கை வகித்தது. இதனால், பரீட்சைகள் மட்டுமன்றி, பாடசாலைகளுக்கு முதலாம் தரத்துக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளல், தவணைகளை ஆரம்பித்தல் உள்ளிட்டவை பிந்தின.

கொரோனா காலகட்டத்தில், நிகழ்நிலை (ஒன்லைன்) ஊடாகவே, பெரும்பாலான பாடங்கள் கற்பிக்கப்பட்டன. இதன்போது, தனியார் வகுப்புகளின் மீதான ஆர்வம் அதிகரித்தது. சமூக வலைத்தளங்களின் ஊடாக, விளம்பரம் செய்த தனியார் வகுப்பு ஆசிரியர்கள், மாணவர்களை வளைத்துப் போட்டுக்கொண்டனர்.

பாடத்திட்டங்களை ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நிறைவு செய்வதற்கு அரசாங்க பாடசாலைகள் திணறிய தருணங்களைச் சரியாக நாடிபிடித்த தனியார் வகுப்புகளின் ஆசிரியர்கள், மிக வேகமாகக் கற்பிக்கத்தொடங்கினர். எனினும், கல்வியமைச்சின் அறிவுறுத்தலின் பிரகாரம், பரீட்சைகள் திணைக்களத்தால் தீர்மானிக்கப்படும் திகதிகளில் மட்டுமே பரீட்சைகள் நடைபெறும்.

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை, கல்விப் பொது தராதர சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகள் பிற்போடப்பட்டமையால், தனியார் வகுப்புகளை நடத்துவோரின் வருமானம் பன்மடங்கில் அதிகரித்தது. இவை பெற்றோர்களுக்கு பெரும் சுமையாக இருந்தன. இன்னுமே இருக்கின்றன.

பெரும் சிரமங்களுக்கு மத்தியில் பரீட்சைகள் நடத்தப்பட்டாலும், விடைத்தாள்களை மதிப்பீடு செய்வோர், அவற்றுக்கான கட்டணங்களை அதிகரித்துக் கேட்டு, பகிஷ்கரிப்பில் ஈடுபட்டமை உள்ளிட்டவையால், பெறுபேறுகளை வெளியிடுவதிலும் தாமதம் ஏற்பட்டது. இவையும் தனியார் வகுப்புகளை நடத்துவோருக்கே அள்ளிக் கொட்டியது.

மேலே குறிப்பிட்ட மிக முக்கியமான தேசிய பரீட்சைகள் மூன்றையும், உரிய காலத்துக்குள் நடத்திமுடித்து பெறுபேறுகளும் உரிய காலத்துக்குள் வெளியிடப்படுமாயின், பெற்றோர்களுக்கான சுமைகள் குறையும். அரச பாடசாலைகளில் மட்டுமே கல்விப்பயின்று, சிறந்த பெறுபேறுகளை எடுத்தவர்களின் எண்ணிக்கை சொற்பமாகும். ஆகக்கூடுதலான சதவீதத்தினர் தனியார் வகுப்புகளையே நம்பியிருக்கின்றனர்.

பரீட்சைகளை உரிய காலத்துக்கு நடத்தமுடியாமைக்கு, இவ்வருட இறுதிக்குள் தீர்வு காணப்படுமெனவும், அடுத்த வருடம் முதல், பழைய அட்டவணையின் பிரகாரம் முன்னெடுக்கப்படும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது மகிழ்ச்சியானது. எனினும், பரீட்சைகளுக்காக குறிக்கப்படும் திகதிகளை மாற்றம் செய்யாத வகையில் எடுக்கப்படும் தீர்மானங்களே சிறந்தது.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# என்னவென்று சொல்வது?

> ஆட்சியாளர்களான ராஜபக்ஷக்களால் கட்டப்பட்ட அரச மாளிகையைப் பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் ரணில் அரசுடன் இரகசியமாகப் பேச்சு நடத்தி, அதனைக் குத்தகைக்குப்பெற்று தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளனர்

> இலவச நிகழ்ச்சியாக முதலில் அறிவித்து பின்னர் 25,000 ரூபாய் 10,000 ரூபாய் மற்றும் 3,000 ரூபாய் என டிக்கெட் விலை நிர்ணயித்து, அதனை வாங்க முடியாத நிலையைக் காரணம் காட்டி சாதாரண ரசிகர்களைத் தூரத்திலேயே நின்று பார்க்க வைத்ததன் விளைவே இந்த களேபரம்

தமது உரிமைகளுக்காக 30 வருடங்களுக்கும் மேலாக போராடிய இனம் தமிழினம். அதற்காக 60,000 க்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகளை மாவீரர்களாக அர்ப்பணித்த இனம், வீரம் விளைந்த மண்ணில் கலை, கலாசாரம், பண்பாடு , பாரம்பரியத்தை பாதுகாத்த இனம் நடிகை தமன்னாவை அருகில் பார்ப்பதற்காக போராடும் இனமாக இன்று மாறிப்போயுள்ளதை என்னவென்று சொல்வது?

வடக்கின் யாழ்ப்பாணத்தில் கடந்த 9ஆம் திகதி இரவு நடத்தப்பட்ட பிரபல தென்னிந்திய பாடகர் ஹரிஹரன் மற்றும் நடிகர், நடிகைகள் பங்கேற்ற “*Hariharan Live in Concert and Star Night*” என்ற இசை நிகழ்ச்சியில் பங்கேற்ற பிரபல நடிகை தமன்னாவின் “காவாலா” ஆட்டத்தை பார்ப்பதற்காக யாழ்ப்பாணத்து இளைஞர்கள் நடந்துகொண்ட விதம்தான் இன்று அவர்களை இந்திய- இலங்கை ஊடகங்களில் “காவாலி”களாக சித்திரிக்கும் நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், இந்த இசை நிகழ்ச்சியில் யாழ்ப்பாணத்து இளைஞர்களினால் ஏற்படுத்தப்பட்ட களேபர நிலைமைக்கு அவர்கள் சினிமா, நடிகர் நடிகைகள் மீது கொண்டுள்ள மோகம், ஈர்ப்பு, அவர்களை அருகில் பார்த்துவிடவேண்டுமென்ற வெறி போன்றவை காரணங்களாக இருந்தாலும் இசை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த நிறுவனத்தின் பொறுப்பற்ற தனம், பணத்தை மட்டும் இலக்காகக் கொண்ட நோக்கு, நிகழ்ச்சியின் ஏற்பாட்டில்,

டிக்கெட் விற்பனைகளில் இருந்த குழறுபடிகள் என்பவையே பிரதான காரணங்களாக உள்ளன.

இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து சென்று கனடாவில் வசிக்கும் தமிழ் தொழிலதிபரான இந்திரன் பத்மநாதன் என்பவரின் ‘நெதேர்ன் யுனிவர்சிற்றி’ என்ற தனியார் நிறுவனத்தால்தான் இந்த இசை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்திரனின் மனைவிதான் தென்னிந்திய நடிகையாக இருந்த நடிகை ரம்பா இவர்களின் இந்த ‘நெதேர்ன் யுனிவர்சிற்றி’ நிறுவனம் தான் வலி. வடக்கில் தனியார் காணிகளை ஆக்கிரமித்து முன்னாள் ஆட்சியாளர்களான ராஜபக்ஷக்களால் கட்டப்பட்ட அரச மாளிகையைப் பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் ரணில் அரசுடன் இரகசியமாகப் பேச்சு நடத்தி, அதனைக் குத்தகைக்குப்பெற்று தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளனர்.

இந்த நிறுவனம் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் பட்டங்களைத் தொலைக் கல்விமுறை மூலம் இங்கு வழங்கும் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளது. எனவே அதற்கு ஆட்களைத் திரட்டுவதற்கான ஒரு ‘புரொமோசன்’ நிகழ்ச்சியாகவே ‘*Hariharan Live in Concert and Star Night*’ என்ற இசை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

தாங்கள் இந்த நிகழ்ச்சியைப் பல கோடிகள் செலவழித்து நடத்துவதாகவும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு தமிழ் மக்களை மகிழ்விக்கவே நடத்துவதாகவும் ஏழை மாணவர்களின் கல்விக்கு உதவுவோம் என்றெல்லாம் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தார்கள். இருந்தாலும் இசை நிகழ்ச்சி முழுக்க முழுக்க ‘பணம் பிடுங்கும்’ நோக்கத்திலான ஏற்பாடுகளுடன்தான் நடந்தது.

ஆரம்பத்தில் இசை நிகழ்ச்சி இலவசமாக ஏற்பாடு செய்யப்படும் எனக் கூறப்பட்ட போதிலும் பின்னர் ஆசனங்களுக்கு ஏற்ற வகையில் 25,000,7000 மற்றும் 3,000 ரூபாய் எனக் கட்டணங்கள் அறிவிக்கப்பட்டு டிக்கெட்டுகள் விற்பனை செய்யப்பட்டன. அதேபோன்று இசை நிகழ்ச்சியில் பங்குபற்றும் பிரபலங்களுடன் விருந்து அருந்திப் புகைப்படமெடுக்க 30 ஆயிரம் ரூபாய் எனவும் அறிவிக்கப்பட்டதுடன், இலவசமாக நின்றவாறும் இசை நிகழ்ச்சியைப் பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பிரபல தென்னிந்தியப் பாடகர் ஹரிஹரனுடன் தென்னிந்திய சினிமா பிரபலங்களான நடிகைகளான தமன்னா, ரம்பா, ஐஸ்வர்யா ராஜேஷ், பிரபல நடன இயக்குநர் கலா மாஸ்டர், நடிகர்களான சிவா, யோகிபாபு பாலா, சாண்டி மாஸ்டர், சின்னத்திரை நடிகர், நடிகைகளான சஞ்சீவ், திவ்ய தர்சினி, ஆல்யமானசா, நந்தினி, மகா லட்சுமி உள்ளிட்ட பலர் பங்கேற்புடன் பொலிஸ் மற்றும் தனிப்பட்ட பாதுகாவலர்களின் பாதுகாப்புடன் கலை நிகழ்ச்சி திட்டமிட்டவாறு 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு ஆரம்பமானது.

யாழ். முற்றவெளியில் எப்படி ஒரு பிரமாண்ட இசை நிகழ்ச்சியை நடத்துவதென்ற அடிமட்ட அறிவுகூட இல்லாது நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 50,000 ரசிகர்கள் பெரும்பாலும் இளைஞர் யுவதிகள் பங்கேற்ற நிகழ்ச்சிக்கு போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவும் இல்லை. இவ்வாறான நிலையில்தான் இலவசமாக இசை நிகழ்ச்சியைப் பார்வையிட வந்த இளைஞர்கள் கட்டணத்துக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் அனுமதிச் சீட்டுகள் இல்லாமல் அமர்ந்ததால் களேபரம் ஏற்பட்டது.

இக்களேபரத்தினை அடக்க மேலதிக பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் களமிறக்கப்பட்டபோதும், நிலைமை கட்டுக்கடங்காது சென்றது. கதிரைகள், தண்ணீர் தாங்கி உள்ளிட்ட பல பொருட்கள் அடித்துடைக்கப்பட்டன. பலர் காயமடைந்தனர். பலர் கைது செய்யப்பட்டனர். நடிகை ரம்பாவின் கணவரின் தனிப்பட்ட பாதுகாவலர்களினாலும் சிலர் கடுமையாகத் தாக்கப்பட்டனர். பொலிஸாரும் ரசிகர்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதல்களையும் நடத்தினர்.

ஒரு கட்டத்தில் ரசிகர்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் பொலிஸார் திணறியதால் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களும் சிறப்பு விருந்தினர்களாக வந்த பிரபலங்களும் அச்சமடைந்த நிலையில், நடிகை ரம்பா, நடிகர் சிவா ஆகியோர் ரசிகர்களிடம் “நாங்கள் இங்கு உங்களை நம்பித்தான் வந்துள்ளோம், உங்களுக்காகவே வந்துள்ளோம், பொலிஸாரை நம்பி வரவில்லை. எனவே, நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடத்த ஆதரவு தாருங்கள்” என வேண்டுகோள்களை விடுத்த போதும், அதனைக் கேட்கும் நிலையில் ரசிகர்கள் இருக்கவில்லை. இதனால் நிகழ்ச்சி இடை நிறுத்தப்பட்டது.

பிரமாண்டமான ஓர் இசை நிகழ்ச்சிக்கு ஒழுங்கமைப்பு முகாமைத்துவம் மிகவும் முக்கியம். ஆனால், அந்த ஒழுங்கமைப்பு, முகாமைத்துவம் இல்லாது நிகழ்ச்சியை நடத்தியதே இறுதியில் யாழ். மண்ணுக்கும் யாழ். இளைஞர்களுக்கும் அவப்பெயரை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விழா குறித்துப் பேசிய நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் ‘நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் எல்லாம் சரியாகத்தான் செய்திருந்தோம். ஆனால், அந்த 35,000 ரசிகர்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்த நிலையில் ஒரு இலட்சம் ரசிகர்களுக்கு மேல் வந்துவிட்டார்கள். கூட்டம் உள்ளே நுழைந்த பிறகு தான் பிரச்சினை ஏற்பட்டது. இதனால் 20 நிமிடங்கள் மட்டுமே நிகழ்ச்சி தடைப்பட்டது. அதன் பின்னர் நிகழ்ச்சி நன்றாகத் தான் சென்றது. நிகழ்ச்சி பாதியில் நின்றது என்பது தவறான தகவல் என்று கூறியுள்ளனர்.

இந்த இசை நிகழ்ச்சி குறித்துப் பதிவிட்டுள்ள பாடகர் ஹரிஹரன் “மறக்க முடியாத நிகழ்ச்சியாக அமைத்த ஜப்னாவிற்கு நன்றி. உங்கள் அன்பும் ஆதரவும் இசையின் வலிமையைக் காட்டி இருக்கிறது. நாம் ஒன்றாக இந்த உறவைக் கொண்டாடுவோம். இந்த விழாவை ஒருங்கிணைத்த கலா மாஸ்ட்ருக்கும் இந்திரகுமாருக்கும் நன்றி. ஒவ்வொரு நொடியும் சிறப்பாக இருந்தது” தெரிவித்துள்ளார்.

சமீப காலமாகத் தென்னிந்திய சினிமா பிரபலங்களை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்து நிகழ்ச்சிகள் நடத்தும் போக்குகள் அதிகரித்து வருகின்றன. இதனை கலாசார ஒழுங்கீனம் என்று குறிப்பிட்டு வரும் ஒரு தரப்பினர் இவ்வாறான நிகழ்வுகளுக்கு எதிரான கருத்துகளையும் வெளியிட்டு வந்தனர்.

இவ்வாறான நிலையில், இந்த இசை நிகழ்ச்சியை நடத்துவது தொடர்பில் ஆரம்பம் முதலே எதிர்ப்புகள் வெளியிடப்பட்டு வந்ததால் நிகழ்ச்சியில் திட்டமிடப்பட்டு குழப்பம் ஏற்படுத்தப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகின. ஆனால் அது தவறு. யாரை மகிழ்விப்பதற்காக இந்த நிகழ்ச்சியை இலவச நிகழ்ச்சியாக முதலில் அறிவித்து, பின்னர் 25,000 ரூபாய் 10,000 ரூபாய் மற்றும் 3,000 ரூபாய் என டிக்கெட் விலை நிர்ணயித்து, அதனை வாங்க முடியாத நிலையைக் காரணம் காட்டி சாதாரண ரசிகர்களைத் தூரத்திலேயே நின்று பார்க்க வைத்ததன் விளைவே இந்த களேபரம்.

தென்னிந்திய சினிமா பிரபலங்கள் அழைத்துவரப்பட்டு யாழ்ப்பாணத்தில் இசை, கலை நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக ஏற்பாடு செய்யப்பட்டு வருவதால் கலை, கலாசார, பண்பாட்டு, சீர்கேடுகள் ஏற்படும் என குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், கடந்த 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட பிரபல பாடகர் ஹரிஹரனின் இசை நிகழ்ச்சியில் ஏற்பட்ட களேபரம் இவ்வாறான குற்றச்சாட்டுக்களுக்கு பலம் சேர்க்கும் ஒரு நிகழ்வாகவே அமைந்து விட்டது.



## வாழ்வியல் தரிசனம்

தெருவில் சும்மா போகும் நாய்க்குக் கல்லால் எறிந்து, அதனுடன் விரோதிக்க வேண்டிய தேவையில்லை. எதிரிகளுடன் மட்டுமல்ல, எவருடனும் பகையை வளர்த்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

இந்தச் செயல்களால் ஏது நன்மைகள் கிட்டப்போகின்றன? பிடிக்காதவர்களுடன் வர்மம் காட்டக்கூடாது. அவர்களை உங்கள் பக்கம் ஈர்க்க, நட்பின் வழியைப் பின்பற்றுங்கள்.

கோபம், ஆணவத்தால் எதையும் சாதிக்க முடியாது; வெறுப்புதான் மிஞ்சும். துன்பங்களை உடைத்தெறிய, நெஞ்சில் அமைதியுடன் யாரையும் கனிவுடன் நோக்குவோம்.

உங்களது நியாயங்களை நிலைநிறுத்த, பிறரை விடாப்பிடியாக வற்புறுத்தத் தேவையில்லை. சொல்ல வேண்டிய விடயத்தில், ‘நான்’ என்ற மமதை கலக்கலாகாது. பணிவுடன் பேசுவதே நிரந்தர வெற்றிக்கு வழிவகுக்கும்.

மனிதனுடன் மட்டுமல்ல; மிருகங்கள், பட்சிகள் என அனைத்து உயிர்களிடமும் பாசத்துடன் நோக்கினால், அவைகள் உங்களுடன் உறவாகி விடும். இந்த உண்மையைச் செயலில் காட்டுங்கள். அனுபவம் மூலம் உணர்வீர்கள்.

கர்வம், அகங்காரம் என்பவை தேகத்தின் நலனுக்கும் கேடானவை; பதற்றம் வேண்டாம்; சாந்தியுடன் நெஞ்சத்தை வைத்திருங்கள். கடவுளை நம்பும் நாம், அனைவருக்கும் பிடித்ததைச் செய்வதே மேன்மை.

நன்றி -பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

# அஞ்சல் பெட்டியில் குளவி கூடு: அகற்றுமாறு கோரிக்கை



மஸ்கெலியா-கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்கு செல்லும் நுழைவாயில் பகுதியில் ஹட்டன்-நோர்வூட் பிரதான வீதியில் அமைந்துள்ள மதுபான உற்பத்தி நிலையம் அருகில் உள்ள அஞ்சல் பெட்டியில் குளவி கூடு கட்டி உள்ளது.

குறித்த பகுதியில் தற்போது கடும் வெப்பமான காலநிலை நிலவுகின்றமையால் எந்த நேரத்திலும் அந்த அஞ்சல் பெட்டியில் உள்ள குளவிகள் அப்பகுதியில் செல்லும் நோயாளிகள் மற்றும் பாசாலை மாணவர்கள், நிழற்குடை பகுதியில் நிற்பவர்களை தாக்க கூடும். ஆகையால், அந்த குளவி கூட்டை அகற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– செ.தி.பெருமாள்

# “34 நாட்களில் நீந்திக் கடந்த நெருப்பாறு”







■ நடராஜா கிருஷ்ணகுமார்

ஈழத்தின் மூத்த எழுத்தாளர் நா.யோகேந்திரநாதன் எழுதிய “34 நாட்களில் நீந்திக் கடந்த நெருப்பாறு” நாவல் வெளியீட்டு விழா கிளிநொச்சியில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

தமிழ் தேசியக் கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில், அவ்அமைப்பின் தலைவரும் ஈழத்து எழுத்தாளருமான தீபச்செல்வன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் படைப்பாளிகள், அரச ஊழியர்கள், இளைஞர், யுவதிகள், பொதுமக்கள் எனப் பலரும் திரண்டு கலந்து கொண்டிருந்தமை விசேட அம்சமாகும்.

# “கொத்துவேலி” கவிதை நூல் வெளியீடு




■ ஏ.எச் ஹஸ்பர்

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பைந்தமிழ்ச்சுடர்.சி.சுதாகரன் நீலையூர் சுதாவின் “கொத்துவேலி" கவிதை நூல் வெளியீட்டு விழா பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மாகாணப் பணிப்பாளர் எஸ்.நவநீதன் தலைமையில் திருகோணமலை நகரசபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாணசபைச் செயலாளர்கள், பிரதிப்பிரதம செயலாளர்கள், திருமலை வளாக முதல்வர், கிழக்கு மாகாண கலைஞர்கள், கலை ஆர்வலர்கள் மற்றும் நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# “செல்வா சேர்” நினைவு நூல் வெளியீட்டு விழா





■ சுஜிதா

ஸ்ரீபாத கல்வியற் கல்லூரியின் உப பீடாதிபதியாக இருந்த வி.டி.செல்வராஜாவின் நினைவாக "செல்வா சேர்" நினைவு நூல் வெளியீட்டு விழா தலவாக்கலை தமிழ் தேசிய பாடசாலையின் பிரதான மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (11) நடைபெற்றது.

நோட்டன் வாசகர் வட்டம் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விழாவை தலவாக்கலை நண்பர்கள் வட்டம் அமைப்பும் இணைந்து சிறப்புற நடத்தியது.

அமரர் வி.டி.செல்வராஜாவின் காலத்தில் அவனுடன் பணியாற்றிய பலரும் கல்வி பயின்ற மாணவர்கள் மற்றும் ஆசிரியர் பயிலுனர்கள் பலரும் தமது ஆக்கங்களுடன் இந்நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், மலையகத்தின் மூத்த இலக்கியவாதியான சாஹித்திய ரத்னா மு.சிவலிங்கம், மல்லியப்பூ சந்தி திலகர் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் மெத்தியூ, அகிலன் உள்ளிட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் எழுத்தாளர்கள், மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்..

நோட்டன் வாசகர் வட்டத்தின் தலைவர் ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நூல் வெளியிட்டு விழாவின், தலைமை உரையை மூத்த எழுத்தாளர் மு.சிவலிங்கமும், வெளியிட்டு உரையை மல்லியப்பூ சந்தி திலகரும் கருத்துரைகளைச் சிரேஷ்ட பேராசிரியர்களும் வழங்கினர். நூலின் முதற் பிரதி, மறைந்த கல்விமானும் உப பீடாதிபதியுமான அமரர் வி.டி.செல்வராஜா துணைவியாரிடம் வழங்கிவைக்கப்பட்டது.

# விளைந்தது விதி





தெட்சணாமூர்த்தி கரிதரன் (சம்பூர் சமரன்) கிழக்குப் பல்கலைக்கழகம்

‘வானம் கடுமையா இருட்டி இருக்கு இண்டைக்கு மழை கட்டாயம் பெய்யும் போல’, ‘ஓம் ஓம் வேகமா இறக்குங்க நெல்லு மூட்டைய நனைஞ்சிட போகுது’ என்றபடி மாணிக்கம் தனது தம்பியை நோக்கி கூறியபடி விரைவாக நெல் மூட்டைகளை உழவு இயந்திரத்திலிருந்து இறக்கி நெல் மூட்டைகளை களஞ்சியப்படுத்துகின்ற குடிலில் அடுக்கினாரகள். கடந்த மூன்று மாதங்களாக யானை, பன்றி என மிருகங்களுடன் போராடியும் கடும் காற்று கொட்டும் பனி என இயற்கையின் கொடூரங்களுடன் உறவாடி காவல் காத்து இன்று தான் அறுவடை முடிந்தது.

ஐப்பசி மழையை எதிர்பார்த்து புழுதியிலே போட்ட விதை இன்று, ஒன்று நூறாகி, நூறு ஆயிரமாகி விளைந்து முற்றி கதிர்மணிகளாகச் சிரித்தன. எமது பிரதேசங்களில் சில வருடங்களுக்கு முன்னர் வேளாண்மை வெட்டும் இயந்திரம் பாவனையில் இல்லை. ஐந்து அல்லது ஆறு பேர் கூட்டமாக இணைந்து ஒவ்வொரு வயலாகச் சென்று அறுவடை செய்து கொடுப்பார்கள். அதை சூடு மிதித்து நெல்லை வேறாக்கி எடுத்து பைகளில் நிரப்பி வண்டிலில் ஏற்றி வீட்டிற்கு கொண்டு வருவோம். ஆனால், இப்போது அப்படியில்லை வேளாண்மை வெட்டும் இயந்திரங்கள் பெருகிவிட்டன. ஏக்கருக்கு இவ்வளவு தான் என்று தீர்மானித்து விட்டு அறுவடை தொடங்கும் ஆட்கள் அதிகமாக இந்த வகை அறுவடையில் தேவைப்படுவதில்லை. இதனால் நேரமும் மிச்சம் ஆகின்றது.

சகோதரர்கள் இருவரும் இம்முறை இயந்திரம் மூலம் முதன்முறையாக அறுவடை செய்து இருந்தனர். அவர்களின் ஐந்து ஏக்கர் வயலில் மூன்று ஏக்கரில் மாணிக்கமும், மிகுதி இரண்டு ஏக்கரில் மாணிக்கத்தின் தம்பி முத்துவும் வேளாண்மை செய்திருந்தனர். முந்தைய முறையை விட இந்த முறை அதிக விளைச்சல் கிடைத்ததாக தங்களுக்குள் பேசிக்கொண்டனர். இந்த முறை மழையும் சரியாக பெய்யவில்லை குளத்திலே கிடந்த நீரைக் கொண்டு தான், தமது வயலை ஒருவாறு விளைய வைத்தனர். கமநல சேவை நிலையத்தின் உரமானியமும் கைகொடுக்க கஷ்டங்கள் ஓரளவு குறைந்து விட்டது போல தோன்றியது. இருவரின் மனதிலும் அந்த உற்சாகம் தான் விரைவாக நெல் மூடைகளை இறக்க வைத்தது எனலாம். நடுத்தர குடும்பத் தலைவர்களாகையால், தங்கள் குடும்ப சுமையை, துணை தாங்குகின்ற அத்திவாரம் போல, உறுதியாக உழைத்து தாங்குகின்றனர். இப்போது அறுவடை செய்த நெல்லை நல்ல விலைக்கு விற்றால் சரிந்து போகும் வீட்டுப் பொருளாதாரத்தை நிமிர்த்தி விடுவார்கள்.

குடிசையிலே அடுக்கி வைத்திருந்த நெல் மூட்டைகளை பார்த்து பூரித்துப் போன மகிழ்ச்சியில் முத்து மனதிற்குள் சிரித்தான். ‘நமக்கு நல்ல காலம் பொறந்திருக்கு விளைச்சலும் இந்த முறை அமோகமா இருக்கு இத காய வச்சி வித்தா நல்ல விலைக்கு விற்கலாம், பச்சையா வித்தா அந்த முதலாளி நம்ம நெல்லை குறைஞ்ச விலைக்குத் தான் எடுப்பான்’ என்று முத்து மாணிக்கத்திடம் கூறினான். ‘ஓம் தம்பி நெறையக் கஷடப்பட்டு மூணு மாசம் உழச்சிற்று இப்படி பச்சையா வித்தா காசு குறையத்தான் வரும் இன்னும் ரெண்டு நாள் நல்லா காய வச்சிட்டம் எண்டால் அடுத்த போகம் விதைக்க நெல்லும் எடுக்கலாம் அதிலயே’ ‘ஓம் அண்ணே நாளைக்கி காலைல்ல நல்லா வெயில் அடிக்கும், அதுல காயப்போடுவம்’ ‘சரி சரி கதவை சாத்திவிட்டு வா நாளைக்கு காலைல்ல வந்து வேலையப் பார்ப்போம்’ என்றபடி நெல்லை விற்பது பற்றி இருவரும் தீர்மானித்து விட்டு அன்றைய பொழுதை கழித்து, இரவு படுக்கைக்கு சென்றனர்.

> **“நெல்மணிகள் எல்லாமே நனைந்து விட்டன. விரிப்போடு இழுத்து குடிலுக்குள் போட்டுவிடலாம் என்று விரிப்பை இழுக்க முயன்றனர். விரிப்பும் இரண்டாகக் கிழிந்தது, தங்கம் போன்ற தோற்றத்தில் உலர்ந்து கிடந்த நெல்மணிகள் பதினைந்து நிமிட மழை வெள்ளத்தால் தாரை தாரையாக அரிந்து நீரோடு அடித்துச் செல்லப்பட்டன**

அடுத்த நாள் காலையில் வானம் நன்றாக வெயில் எறித்தது. அடுக்கி வைத்திருந்த நெல் மூட்டைகளை ஒவ்வொன்றாக எடுத்து அவற்றைக் தரையில் கொட்டி, பெரிய விரிப்பு ஒன்றிலும் அவர்களின் வீட்டின் முன்னே உள்ள கொங்கிரீட் வீதியிலும் காய வைத்தார்கள். தங்க முத்துக்கள் போல நெல்மணிகள் சூரிய ஒளியில் காட்சி தந்தன. நெல்லின் மணம் மாணிக்கத்தின் உள்ளத்தில் கிளர்ச்சியை ஏற்படுத்தியது.

எத்தனை நாள் இதற்காக காத்திருந்தோம் என்று நினைத்துக் கொண்டார். காய வைத்த நெல்லை பறவைகள் மற்றும் மாடுகள் என்பன தீண்டாத வண்ணம் ஒருவர் மாறி ஒருவர் நெல்லுக்கு பொறுப்பாக நின்றார்கள்.

அன்று மதிய வேளை கடந்து மூன்று மணியளவில் திடீரென்று மேகக்கூட்டங்கள் வானிலே கருஞ்சட்டை போர்த்திய போர் வீரர்களைப் போல அணிவகுத்து நின்றன, பீரங்கிச் சத்தம் போன்று இடி இடித்தது, தீப்பந்த ஒளி போல மின்னலும் வெட்டியது. பெருமழைக்கு வரவேற்பாக இவை அறிகுறி காட்டின.

இந்து மகா சமுத்திரத்தின் நீரெல்லாம் ஆவியாகிப் பொழிவதை போல மழை சோவென வானத்திலிருந்து இடைவிடாது கொட்டியது.

இத்தனையும் கணப்பொழுதில் நடந்தேறியது. அதனை சற்றும் எதிர்பார்த்திராத மாணிக்கமும், முத்துவும் நெல்லை அள்ளி பைகளில் நிறைத்திட விரைவாக செயல்பட்டனர். ஆனால், அது முடியாமல் போனது நெல்மணிகள் எல்லாமே நனைந்து விட்டன. விரிப்போடு இழுத்து குடிலுக்குள் போட்டுவிடலாம் என்று விரிப்பை இழுக்க முயன்றனர். விரிப்பும் இரண்டாகக் கிழிந்தது, தங்கம் போன்ற தோற்றத்தில் உலர்ந்து கிடந்த நெல்மணிகள் பதினைந்து நிமிட மழை வெள்ளத்தால் தாரை தாரையாக அரிந்து நீரோடு அடித்துச் செல்லப்பட்டன. கொங்கிரீட் வீதியிலும் காயப் போட்டிருந்த நெல்மணிகளும் வடிகானில் விழுந்து நீரோட்டத்தில் கலந்தன. நிலத்தில் விளைந்தது நிலத்திற்கே சொந்தமா? என்று கூறுமளவிற்கு நெல்மணிகள் எல்லாமே நீரோடு அடித்துச் செல்ல மாணிக்கமும், முத்துவும் செய்வதறியாது திகைத்தனர். கண்ட கனவெல்லாம் காலமழை அழைத்துச் சென்றதே என தலையில் அடித்து கொண்டு அங்கும் இங்கும் நெல்மணிகளை பொறுக்க ஓடினார்கள், தெருவில் வடிகான் நீரோட்டம் அதிகமாதலால் அதுவும் பயனற்றுப் போனது.

காலமழையில் கண்ணீரும் கலந்து விட கனவைத் தொலைத்த, மண்ணின் நாயகர்கள் நடைபிணமாய் கிடக்க இத்தனை நேரமும் கூடவே போராடிய குடும்பத்தினரும், பருவம் தப்பிய மழையை பழி சொல்லி சபித்தனர். தமது இயலாமையால் துவண்டனர். விளைந்த நெல் வீட்டிற்கு வந்தது ஆனால் விலை போகாமல் வீணானது என்று விம்மி விம்மி அழுதனர். விவசாயி ஒரு போகச் செய்கைக்கு ஓராயிரம் கடன்பட்டு விதை போடுவான், அவனுக்கு ஆதரவாய் நிற்பது மண்ணும் விண்ணும் என்பர். ஆனால் இங்கு மண் பயனளித்தது விண்ணோ! பழி தீர்த்தது. விளைந்த நெல்லின் காட்சிகள் கண்ணில் படிமமாய் நின்றது. பட்ட துயரங்கள் மழைத் தூரலில் தொலைந்து விட்டது. போனது இனி மீண்டும் வருமோ? நெஞ்சில் பெரிய கல்லை எற்றியது போல பாரத்தை மாணிக்கம் உணர்ந்தான். தன் குடும்பத்தை எவ்வாறு கரை சேர்ப்பேன் என்று மனதிற்குள் குமுறினான். முத்துவும் வாய் விட்டு அழுதான், உழைப்பெல்லாம் ஊதிய காற்றில் ஊரெல்லாம் பறக்கும் பஞ்சாக சிதைந்து போனதை எண்ணி கடவுளை நொந்தனர்.

நீண்ட நேரம் கவலை தோய்ந்த முகத்துடன் வீட்டு வாசலில் இருந்த மாணிக்கம், மனமுடைந்து வீதியில் நின்ற தம்பியை அழைத்தார், ‘இங்க பாரு தம்பி மனச தளர விடாத திரும்பவும் நம்ம வேலயத் ஆரம்பிக்க வேணும், வேளாண்ம செய்றவனுக்கு இதென்ன புதுசா? எல்லாம் அவன் செயல், பரம்பரத் தொழில கைவிடக் கூடா’ என்று ஆறுதல் கூறினார். முத்துவும் அண்ணன் வாக்கே ஆண்டவன் வாக்கென வாழ்பவன் என்பதால் ‘ம்ம் சரி அண்ணே’ என்று பதிலளித்தான். நீண்ட பெருமூச்சு விட்ட மாணிக்கம் ‘விதி வலியது சாமி’ என்று விண்ணை பார்த்து விகடமாக கூறினான். விழுந்தும் விழாத விவசாயத் தெய்வமாய் அடுத்த போகத்திற்கு மீண்டும் நெல்லை விதை போட காத்திருந்தான் கால மழையை எதிர்பார்த்து...

இங்கிலாந்து



# 1,700 ஆண்டுகள் பழைமையான முட்டை

இங்கிலாந்தின் பெர்ரிஃபீல்ட்ஸ் பகுதியில் 1,700 ஆண்டுகள் பழைமையான கோழி முட்டை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த முட்டையை ஆய்வு செய்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் குழு, சேதமடையாத முட்டையின் மஞ்சள் கருவும் வெள்ளை கருவும் இன்னும் இயற்கையாக முட்டையில் பாதுகாக்கப்படுவதைக் கண்டு ஆச்சரியமடைந்துள்ளனர்.

ஆக்ஸ்போர்டைச் சேர்ந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர் எட்வர்ட் பிடுல்ஃப் இது குறித்து தெரிவிக்கையில், “1,700 ஆண்டுகளுக்குப் பிறகும் மனித தலையீடு இல்லாமல் இயற்கையாகவே மஞ்சள் கருவும் வெள்ளையும் பாதுகாக்கப்பட்ட உலகின் ஒரே முட்டை இது என்று நம்புகின்றேன்” என தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியா

## வேலை நேரம் முடிந்த பின்னர்

# அழைப்பை நிராகரிக்க உரிமை

ஆஸ்திரேலிய செனட் சபை, அந்நாட்டு ஊழியர்களின் நலன் கருதி “ரைட் டு டிஸ்கனெக்ட்” (Right to Disconnect) எனும் “தொடர்பு அறுக்கும் உரிமை” குறித்து சட்டம் இயற்றியுள்ளது.

இச்சட்டத்தின்படி, ஊழியர்களை பணியமர்த்தும் நிறுவனங்கள், தங்கள் பணி நேரத்தை முடித்த ஊழியர்களை, நிறுவன அதிகாரிகள் செய்தி, மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி அல்லது வேறு எந்த வகையிலும் தொடர்பு கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று, பணிக்கான நேரம் முடிந்ததும் ஊழியர்கள் தங்கள் தொலைபேசிகளை அணைத்து வைத்து கொள்வதும் அவர்களின் உரிமை என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், மென்பொருள், தகவல் தொடர்பு உள்ளிட்ட பல துறைகளில் பணிக்கான நேரம் முடிந்து ஊழியர்கள் சென்ற பிறகும், தங்கள் மின்னஞ்சலை அவ்வப்போது பார்த்து அலுவல் குறித்த முடிவுகளை எடுக்க கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

தாங்கள் தேவையற்று அழைக்கப்படுவதாக பணியாளர்கள் உணர்ந்தால் நிறுவன மேலிடத்தில் தெரிவிக்க வேண்டும். அதில் தீர்வு காணப்படவில்லை என்றால், பணியாளர் நல ஆணையத்திடம் முறையிடலாம்.

இச்சட்டத்திற்கு புறம்பாக ஊழியர்களை அழைக்கும் நிறுவனங்களுக்கு இனி அபராதம் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# காணாமல் போன கடல்



கஜகஸ்தானுக்கும் - உஸ்பெகிஸ்தானுக்கும் இடையே ‘ஆரல்’ எனும் கடல் அமைந்துள்ளது. இந்த கடல் 68 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவை கொண்டது. இது உலகின் 4ஆவது பெரிய கடல். 1960இல் சோவியத் நீர்ப்பாசனத் திட்டங்களால் ஆறுகள் திசைமாறிய பிறகு இது சுருங்கத் தொடங்கியுள்ளது.

2010இல் பெரும்பாலும் வறண்டது. ‘ஆரல்’ கடல் காணாமல் போனதற்கான காரண ம் குறித்து விரிவாக ஆய்வு நடந்தது. 1960இல் சோவியத் யூனியன் கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான் மற்றும் துர்க்மேனிஸ்தான் ஆகிய வறண்ட சமவெளிகளில் நீர்ப்பாசன நோக்கத்திற்காக ஆற்றுத்தண்ணீர் திசை திருப்பப்பட்டது. இதனால் ஆரல் கடல் வற்ற தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சண்டிகர்

# 7 மாவட்டங்களில் இணைய சேவை முடக்கம்



புதுடெல்லியில் பேரணி நடத்த அரியானா, பஞ்சாப் மாநிலத்தில் இருந்து விவசாயிகள் புறப்பட்ட வண்ணம் உள்ளனர். அரியானாவில் இருந்து விவசாயிகள் புதுடெல்லிக்கு செல்ல முடியாத வகையில் பல்வேறு தடுப்புகளை அம்மாநில அரசு அமைத்துள்ளது.

செவ்வாய்க்கிழமை (13) அரியானா- பஞ்சாப் மாநில எல்லையில் ஏராளமான விவசாயிகள் குவிந்தனர். அவர்கள் தடுப்புகளை அகற்றி முன்னேற முயன்றனர். அப்போது அரியானா பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டுகள் வீசி விவசாயிகளை விரட்டினர். இதற்கு எதிர்க்கட்சி தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

மேலும், பல இடங்களிலிருந்தும் விவசாயிகள் பேரணியில் கலந்து கொள்ள தயாராகி வருகிறார்கள். இதனால் அசாதாரண நிலை உருவாகியுள்ளது.

இந் நிலையில் அரியானாவில் அம்பாலா, குருஷேத்ரா, கைதால், ஜிந்த், ஹிசர், படேஹாபாத், சிர்சா மாவட்டங்களில் மொபைல் இணைய தள சேவைக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. தொலைபேசி அழைப்புக்கு மட்டும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த தடை வியாழக்கிழமை (15) வரை நீடிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை

## ஒரு வாரத்தில் இலங்கை செல்ல

# சாந்தனுக்கு அனுமதி



முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற 7 பேரை முன்கூட்டியே விடுவித்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. அதில், இலங்கையைச் சேர்ந்த முருகன், சாந்தன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் திருச்சி முகாமில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே நோய்வாய்ப்பட்டுள்ள தனது தாயை கவனிக்க தன்னை இலங்கைக்கு அனுப்பி வைக்க வேண்டும் என சென்னை உயர் நீதிமன்றில் சாந்தன் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு நீதிபதிகள் ஆர்.சுரேஷ்குமார், கே.குமரேஷ்பாபு ஆகியோர் தலைமையில் விசாரணைக்கு வந்தது.

அப்போது அரசு தரப்பில் ஆஜரான சட்டதரணி, “திருச்சி சிறப்பு முகாமில் உள்ள சாந்தன் இலங்கை திரும்புவதற்கான தற்காலிக பயண ஆவணத்தை இலங்கை துணை தூதரகம் அனுப்பியுள்ளது. இந்த ஆவணங்கள் மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது” என தெரிவித்தார். மத்திய அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ.ஆர்.எல்.சுந்தரேசன், “இதுவரை தங்களுக்கு அந்த ஆவணங்கள் கிடைக்கவில்லை. தற்போது உயர் நீதிமன்றில் வழங்கப்பட்டுள்ள ஆவணங்களை மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கிறேன். அதனடிப்படையில், சாந்தனை இலங்கைக்கு அனுப்ப ஒரு வாரத்தில் தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும்” என தெரிவித்தார்.

## இந்தியா எதிர் இங்கிலாந்து:

# மூன்றாவது டெஸ்ட் இன்று ஆரம்பிக்கிறது



இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியானது ராஜ்கோட்டில் இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் இங்கிலாந்தும், இரண்டாவது போட்டியில் இந்தியாவும் வென்றுள்ள நிலையில் தொடரில் முன்னிலையை இப்போட்டியில் எந்த அணி பெறும் என்பது தீர்மானிக்கும்.

இந்திய அணியைப் பொறுத்த வரையில் ஷ்ரேயாஸ் ஐயர் குழாமிலிருந்து நீக்கப்பட்டுள்ள நிலையில் அவரை சஃப்ராஸ் கான் அணியில் பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுவதோடு, முகேஷ் குமாரை மொஹமட் சிராஜ் பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது. தவிர இரவீந்திர ஜடேஜா போட்டியில் விளையாடும் உடற்றகுதியைப் பெற்றால் அக்ஸர் பட்டேலைப் பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபக்கமாக இங்கிலாந்தானது கடந்த போட்டியில் விளையாடிய ஷொய்ப் பஷிரை மார்க் வூட் மூலம் பிரதியிட்டுள்ளது.

இப்போட்டிக்கான ஆடுகளமானது ஓரளவுக்கு துடுப்பாட்டத்துக்கு சாதகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## நுவரெலியா கால்பந்தாட்டச் சங்கத் தொடர்:

# சம்பியனான பரிசுத்த திருத்துவ மத்திய கல்லூரி


■ ஆ. ரமேஸ்

நுவரெலியா கால்பந்தாட்ட சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 18 வயதுக்குட்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் பரிசுத்த திருத்துவ மத்திய கல்லூரி சம்பியனாகியது.

அண்மையில் நடைபெற்ற பாடசாலை மற்றும் கழகங்கள் அடங்கலாக மொத்தம் 14 அணிகள் பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் யுனிட்டி விளையாட்டுக் கழகத்தை வென்று பரிசுத்த திருத்துவ மத்திய கல்லூரி சம்பியனாகியது.

இதேவேளை தொடரில் சிறந்த வீரராக பரிசுத்த திருத்துவ மத்திய கல்லூரியைச் சேர்ந்த டிலக்ஷனும், சிறந்த கோல் காப்பாளராக யுனிட்டியின் சஞ்சிவ்வும் தெரிவாகினர்.





இந்நிலையில் 45 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான அணிக்கு ஏழு பேர் கொண்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் லெலெண்ட் கழகத்தை வென்று யங் யுனைட்டெட் கழகம் சம்பியனானது.

## சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில்

# முதலாமிடத்துக்கு முன்னேறிய நபி



சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் முதலாமிடத்துக்கு ஆப்கானிஸ்தானின் மொஹமட் நபி முன்னேறியுள்ளார்.

இலங்கைக்கெதிரான முதலாவது போட்டியில் 136 ஓட்டங்களைப் பெற்றதுடன், ஒரு விக்கெட்டைக் கைப்பற்றிய நிலையிலேயே நபி இரண்டாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி முதலாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 5 சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.மொஹமட் நபி, 2.ஷகிப் அல் ஹஸன், 3.சிகண்டர் ராசா, 4.ரஷீட் கான், 5.அசாட் வலா

இதேவேளை, பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் 8ஆம் இடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஏழாமிடத்தை நபி அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

1. கேஷவ் மஹராஜ், 2.ஜொஷ் ஹேசில்வூட், 3.அடம் ஸாம்பா, 4.மொஹமட் சிராஜ், 5.ஜஸ்பிரிட் பும்ரா, 6.ரஷீட் கான், 7.மொஹமட் நபி, 8.ஷகீன் ஷா அஃப்ரிடி, 9.குல்தீப் யாதவ், 10.ட்ரெண்ட் போல்ட்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

பாபர் அஸாம், 2.ஷுப்மன் கில், 3. விராட் கோலி, 4.றோஹித் ஷர்மா, 5.டரைல் மிற்செல், 6.டேவிட் வோர்னர், ஹரி டெக்டர், 8.டேவிட் மலன், 9. றஸி வான் டரி டுஸன், 10.ஹென்றிச் கிளாசென்.

இதேவேளை, டெஸ்ட் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் நியூசிலாந்தின் கைல் ஜேமிஸன், தென்னாபிரிக்காவுக்கெதிரான முதலாவது டெஸ்டில் ஆறு விக்கெட்டுகளைக் கைப்பற்றியமையைத் தொடர்ந்து 14ஆம் இடத்திலிருந்து ஆறு இடங்கள் முன்னேறி எட்டாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

1. ஜஸ்பிரிட் பும்ரா, 2.ககிஸோ றபாடா, 3.இரவிச்சந்திரன் அஷ்வின், 4.பற் கமின்ஸ், 5.ஜொஷ் ஹேசில்வூட், 6.பிரபாத் ஜெயசூரிய, 7.ஜேம்ஸ் அன்டர்சன், 8. கைல் ஜேமிஸன், 9.நேதன் லையன், இரவீந்திர ஜடேஜா, ஒலி றொபின்ஸன்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1. கேன் வில்லியம்சன், 2.ஸ்டீவ் ஸ்மித், 3.ஜோ றூட், 4.டரைல் மிற்செல், 5.பாபர் அஸாம், 6. உஸ்மான் கவாஜா, 7.விராட் கோலி, 8.ஹரி ப்ரூக், 9.திமுத் கருணாரத்ன. 10.மர்னுஸ் லபுஷைன்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

இரவீந்திர ஜடேஜா, 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. ஷகிப் அல் ஹஸன், 4. பென் ஸ்டோக்ஸ், 5. அக்ஸர் பட்டேல்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 15 பெப்ரவரி 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.